ஜேம்ஸ் பாண்ட் துப்பறியும்
எரி நட்சத்திரம்
ராணி காமிக்ஸ்

## கருத்துப் போட்டி எண்-15 முடிவு

"ரத்தக் காட்டேறி" சித்திரக் கதை கருத்துப் போட்டியில் ஆர்வமுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டுகள். மிகச் சிறந்த கருத்தை அனுப்பியவர் என்று தேர்ந்து எடுக்கப் பட்டு, அதற்காக ரூ. 50 பரிசு பெறுபவர்:—

பி. வெங்கடாசலபதி,
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியம்,
குறளகம், சென்னை-108.

"ரத்தக் காட்டேறி" சித்திரக் கதையில், ஜேம்ஸ்பாண்டை யும், அவரது சக உளவாளி ஜெசிக்காவையும், ரத்தக் காட்டேறி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் காரை ஏற்றி கொல்ல முயல் கிறார்கள்.

அதன் காரணமாக ஜேம்ஸ்பாண்ட், ஜெசிக்காவிடம், "நீ இங்கு இருப்பது ஆபத்து. என்னுடன் லண்டன் வந்துவிடு!" என கூறுகிறார். ஆனால் அவள் "என்னைப் பற்றி கவலை வேண் டாம். என்னைக் காக்க எனக்குத் தெரியும்!" என்று மறுத்துவிடு கிறாள்.

"ஜேம்ஸ்பாண்ட் விமானம் ஏறும்போது கூட, "ஜெசி! பயப்பட வேண்டியதற்கு பயந்தே ஆகணும்!" என கூறுகிறார். ஆனால் ஜெசிக்கா மறுத்து, "ஆபீஸ் உத்தரவுப்படி நான் இங்கே இருக்க போகிறேன்!" என்று உறுதியாக கூறிவிடுகிறாள்.

இந்த சம்பவம்தான் என் மனதை கவர்ந்த சம்பவம் ஆகும். ஆபத்தை கண்டு அஞ்சாமல் கடமை ஆற்ற நினைத்த ஒரு முன் மாதிரியான ஊழியரை நான் ஜெசிக்காவிடம் கண்டேன்!

இங்கிலாந்தின் மிகச் சிறந்த துப்பறிவாளரும், தேச விரோத சக்திகளை ஒடுக்குவதில் பல சாகசங்களை புரிந்தவரும், துன்பங் களை அனுபவித்து வெற்றி கண்டு ஈடு இணையற்றவருமான ஜேம்ஸ் பாண்டே, ரத்தக் காட்டேறிகளின் கொலை வெறியை கண்டு ஜெசிக்காவை திரும்ப சொல்வதும் பெண் உளவாளி தனக்கு கடமைதான் முக்கியம், ஆணைக்கு கீழ்படிந்து தேச விரோத சக்திகளை ஒடுக்க பங்கு பெறுவது தனது தலையாய கடமை என்று உணர்த்தும் அஞ்சா நெஞ்சமும் கடமையுணர்வும் கொண்ட இந்தக் கருத்துள்ள கட்டம்தான் எனது மனதைக் கவர்ந்தது."

இவ்வாறு பா. வெங்கடாசலபதி கூறி உள்ளார்.

ராணி காமிக்ஸ்—25
(மாதம் இருமுறை இதழ்)

TV

ஜூலை 1—14
1985

# ஜேம்ஸ் பாண்ட் துப்பறியும், ★ஒரு நட்சத்திரம்!


இங்கிலாந்தில் லண்டன் அருகே உள்ள ஒரு ஊரில் ராபர்ட் என்பவர் வசித்து வந்தார். அவர் ராணுவத்தில் கர்னலாக வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். அவருக்கு கிழே மேஜராக வேலை செய்தவர் கார்லி. ஓய்வு பெற்றதும் கார்லி, கார் பழுது பார்க்கும் ஒர்க்ஷாப்பை நடத்தி வந்தார். ஒருநாள் ராபர்ட் கார்லியிடம் வந்து—
கார்லி! என் மகள் ஜெனிபர், ஹிப்பிகள் கூட்டத்தில் சேர்ந்து விட்டாள்.
அவளை மீட்க உன் உதவி தேவை!


ஹிப்பி கூட்டத்துடன் சேர்ந்து என் மகள் குட்டிச்சுவராய் போய்விடக் கூடாது. உடனடியா போய் அவளை மீட்போம்!
இந்தா! பாதுகாப்புக்கு இதை வைத்துக் கொள்!
உலகப் போரில் என் உயிரை காத்த உங்களுக்கு உதவாமலா?

ஆண், பெண் ஹிப்பிகள் நிறைய பேர் இருந்த அந்த முகாமில் ராபர்ட்டின் மகள் ஜெனிபரும் இருந்தாள். ஹிப்பிகளின் தலைவர் — ஹிப்பி ரிஷி ஆஸ்ட்ரோ பேசினார்—
நாம் வான மண்டலத்தில் சுதந்திரமாக இயங்கும் நட்சத்திரங்களின் மக்கள். கிரகங்களின் உடன்பிறப்பு.

ஹிப்பிகளுக்கு நீ தலைவனா? மோசக்காரன்! இந்த ஹிப்பிகள் யார் நகர்ந்தாலும் சுடு! கார்லி!
ஹிப்பி—ரிஷி ஆஸ்ட்ரோவை ராபர்ட் கண்மண் தெரியாமல் தாக்கினார். பிறகு தன் மகளிடம் வந்தார்.
உம்! எழுந்து என்னுடன் வா!
கார்லி, இவளை வீட்டுக்கு கூட்டிச் செல்! அந்த பயல் ஆஸ்ட்ரோவை இன்னும் கவனிக்க வேண்டும்!
வான நட்சத்திரத்தின் மகளா நீ? எந்த கிரகம் உனக்கு உதவும் பார்க்கிறேன!
அந்த சம்பவம், பல மர்ம நிகழ்ச்சிகள் பின்தொடர, பிள்ளையார் சுழி போட்டது!
வான நட்சத்திரத்தின் மகன் என்று பறைசாற்றி கொண்ட ஆஸ்ட்ரோவை ஒருவர் தாக்கியது பர-பரப்பை ஏற்படுத்தியது. பத்திரிகை நிருபர்கள் அவரை சந்தித்தனர்.
என்னைத் தாக்கிய ராபர்ட் பழிவாங்கப் படுவார். நட்சத்திர நெருப்பு கோளம் அவரை அழிக்கும்!
உங்க வான தேவதைகளின் அசரீரி வாக்கு என்ன?
வானத்தில் இருந்து மர்ம தாக்குதலா? ஆச்சரியம்தான் ஆஸ்ட்ரோ!

மறுநாள்.
ஒரு ஓட்டலில் ரோகோ என்பவர் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்.
அது மெக் அல்லவா? என்னை அவனுக்கு அடையாளம் தெரியலியா?
மெக், ரோகோவின் பழைய எதிரி. ரோகோ சாப்பிட்டுக்கொண்டே பேப்பர் படித்தார்.
ஆஸ்ட்ரோ மீது கர்னல் தாக்குதல்! பழிவாங்க ஆஸ்ட்ரோ சபதம்!!
நட்சத்திரங்கள் பழிக்கு பழி வாங்குமா?
முதலில் மெக்! இப்போ இந்தச் செய்தி! அட கடவுளே! இதெல்லாம் உண்மையா?
தற்செயலாக ரோகோவைப் பார்த்த மெக் திடுக்கிட்டார்.
யார் இவன்? இவனைப் பார்த்த நினைவு இருக்கே!
மெக் என்ற மெக் ஆர்த், சாப்பிட்டு முடித்ததும் நேராக தனது லண்டன் ஆபீஸ் திரும்பினார்.
ஓட்டலில் அந்த ஆள் உன்னையே முறைத்து பார்த்ததால் சந்தேகப் படுகிறாயா?

அவனை இதற்குமுன் எங்கோ சந்தித்து இருக்கேன்.
காரணம் என்னவாக இருக்கும்?
அந்த மீசை இல்லாமல் இருந்து இருந்தால்?
பழைய ராணுவ கர்னலும், ஹிப்பி— ரிஷி ஆஸ்ட்ரோவை அடித்தவருமான ராபர்ட் மாலையில் வழக்கம் போல் வாக்கிங் போய்க்கொண்டு இருந்தார்.
கர்னல் ராபர்ட்!
எஸ்! என்ன வேணும்?
எனக்கு மறதி ஜாஸ்தி. உங்களை நினைவு இல்லையே!
இந்த சங்கிலி உங்க மகள் உடையதா? உங்க வீடு அருகே ரோட்டில் கிடந்தது!
அவள் இனிஷியல் இருக்கு. ஆல் ரைட்! இது என் மகள் ஜெனிபருக்கு உரியதாகவே இருக்கும். உங்களுக்கு நன்றி!

கிழட்டு கர்னலே! உனக்கு கிரகச் சாரம் சரி இல்லே!
கொஞ்ச நேரத்தில், வானத்தில் இருந்து மர்ம தீக்கோளம் இறங்குவதைப் பார்த்து ஒருவர் ஆச்சரியம் அடைந்தார்.
கடவுளே! இதென்ன! எரி நட்சத்திரமா?
வானத்தில் இருந்து வந்த அந்த மர்ம நெருப்பு உருண்டையை கர்னலின் நாய் பார்த்து குரைத்தது. அது குரைத்ததைப் பார்த்த கர்னல் ராபர்ட்—
ஐயோ! அது என்னை நோக்கி வருதே!
அந்த தீ உருண்டை கர்னலைத் தாக்கி வெடித்தது. கர்னலும், நாயும் கருகிச் செத்தனர்!
ஒரு எரி நட்சத்திரம் வானில் வந்ததை ஒருவர் பாரத்து இருக்கிறார்.
அது தாக்கி கர்னல் இறந்து விட்டார்!

எரி நட்சத்திரம் தாக்கி கர்னல் இறந்த செய்தி காட்டுத் தீ போல் பரவியது. பத்திரிகை நிருபர்கள் ஹிப்பி தலைவர் ஆஸ்ட்ரோவை சந்தித்தனர்.
உண்மைதான் கர்னலை பழிவாங்க எரி நட்சத்திரத்தை வர வழைத்தது நான்தான். அதை நான் மறைக்க விரும்பவில்லை. காரணம் போலீசார் அதை நிருபிக்க முடியாது. என் மீது குற்றம்சாட்ட முடியாது!
ஆஸ்ட்ரோ! எரி நட்சத்திரத்தை வரவழைத்து பழி தீர்த்தது நீங்கதானா?
ஆமா! என் சாபத்தால் எரி நட்சத்திரம் அவனை எரித்தது!
லண்டன் உளவுத்துறை கேண்டீன்.
ஜேம்ஸ்! ஹிப்பி தலைவரின் நட்சத்திர தாக்குதல்!
லண்டன் பிளிட் தெருவில் உள்ள ஒரு பெரிய தினசரி பத்திரிகையின் செய்தி பிரிவில்—
ஆசிரியர் கடிதப் பகுதிக்கு ஒரு கடிதம். ஹிப்பி தலைவர் ஆஸ்ட்ரோவை திட்டி எழுதி இருக்கு!
எழுதியவர் பெயர் மெக் கார்த். கடிதத்தை பிரசுரிக்க முடியாது. காரணம் கண்டபடி திட்டி எழுதி இருக்கார்.

அன்று இரவு மெக் தனது வீட்டுக்கு தாமதமாக திரும்பினார்.
என்ன இது? கதவு திறந்து இருக்கு!
எச்சரிக்கை அடைந்த மெக் துப்பாக்கியை எடுத்தார்.
கதவை பூட்டிவிட்டு அல்லவா வெளியே சென்றேன்!
உள்ளே சத்தம் எதுவும் கேட்கவில்லை. நீட்டிய துப்பாக்கியுடன் அவர் விளக்கை போட்டார்.
அதென்ன? மேஜையில் ஒரு கடிதம் கிடக்குதே!
மெக் மிகவும் எச்சரிக்கையாக உள்ளே நுழைந்து கடிதத்தை எடுத்தார்.
யாரோ உள்ளே புகுந்து, ஒரு செய்தி எழுதி வைத்து இருக்காங்க!
மெக்! என்னை அடையாளம் தெரியவில்லை, அல்லவா? இனி உன்னை யாருக்குமே அடையாளம் தெரியாது! என் இறுதி மரியாதை உரித்தாகுக!

மீசை வைத்துக்கொண்டால் உன்னை தெரியாதா எனக்கு? விரைவில் உன்னை பிடிப்பேன்!
தீப்பெட்டி அளவில் ஒரு சிறிய மர்மப் பெட்டி இருப்பதைப் பார்த்து மெக் திகைத்தார்.
உம்... இதென்ன? பெட்டி?
அதென்ன வெளிச்சம், என்னை நெருங்குதே!
மெக்கின் கருகிய பிணத்தை போலீசார் எடுத்துச் சென்றனர்.
வெடிச் சத்தம் கேட்ட ா? அது எப்படி நடந்தது மிஸ்டர்?
இருட்டில் இருந்து ஒரு வெளிச்சம் உருண்டு வந்தது. எரி நட்சத்திரம் மாதிரி! ஆனா வெடித்தது!

பிளிட் தெருவில் உள்ள பத்திரிகை ஆபீசில்...
என்ன? மெக் கார்த் என்பவர் ஏன் கொல்லப்பட்டார் என்று உனக்குத் தெரியுமா?
ஆமா! ஆஸ்ட்ரோவை தாக்கி மெக் கடிதம் எழுதி இருந்தார்!
ஹிப்பி—ரிஷி ஆஸ்ட்ரோவை தாக்கி மெக் கடிதம் எழுதியதை அவள் விவரித்தாள்.
ஆசிரியர் கடிதப் பகுதிக்கா அந்த கடிதம் வந்தது?
கடிதத்தில் மெக்தான் கையெழுத்து போட்டு இருந்தாரா?
ஆமா! அவரேதான்! ஆஸ்ட்ரோவை பெண் பித்தன்—குதர்க்கவாதி, என்று கன்னுபின்னு என எழுதி இருந்தார்!
மெக் கார்த் யார் என்று எனக்குத் தெரியாது.
ஆனல் நட்சத்திரங்களுக்கு தெரியும்! அந்த முட்டாளை எரி நட்சத்திரம் பலி கொண்டு விட்டது. மற்றபடி எனக்கு ஒன்றும் தெரியாது!

உளவு அலுவலகம். அந்தரங்க காரியதரிசி கிரேசி பத்திரிகை படித்தாள்.
இரண்டாவது எரி நட்சத்திர பலி!
வான நட்சத்திரம் பழிதீர்ப்பதாக ஹிப்பி-தலைவர் கருத்து!!
முதலில் கர்னல் இப்போது இந்த தொழில் அதிபர். ஜேம்ஸ் உங்க கருத்து என்ன?
நம்ம தலைவர் "எம்" என்ன நினைக்கிறார்?
நம்ம தலைவர் நினைக்க என்ன இருக்கு?
மெக் கார்த் அமெரிக்க உளவுத்துறையை சேர்ந்தவர். தொழில் அதிபர் என்பது வெளிப்போர்வை!
ஜேம்சை, உளவுத்துறை தலைவர் "எம்" அழைத்து பேசினார்.
மெக் இறந்ததால் அமெரிக்க உளவுத்துறை சி. ஐ. ஏ., நம்மை நெருக்குகிறார்கள். ஏதாவது தடயம் கிடைத்ததா?
இறந்த கர்னல் ராபர்ட் உடலில் இந்த சங்கிலி லாக்கெட் கண்டு எடுக்கப்பட்டது. ஆனால் அது தன்னுடையது இல்லை என்று அவர் மகள் ஜெனிபர் மறுக்கிறாள்.

ஆஸ்ட்ரோவின் ஹிப்பிகள் முகாமில்...
முட்டாளே! அவர்களை கண்காணி. இல்லை, நீயும் பலி ஆவாய்.
கர்னல் ராபர்ட், மெக் ஆகியோர் பழிக்குப் பழி வாங்கப்பட்டதைத் தொடர்ந்து ஹிப்பி தலைவர் ஆஸ்ட்ரோ மிகவும் பிரபலம் அடைந்தார்.
கார்பெட் என்ற பேராசிரியர், நம்மை எல்லாம் ஜெயிலுக்குள் தள்ளணும் என்று சொல்லி இருக்கார்!
நமது பழிக்குப் பழி லிஸ்டில் அடுத்தது அவர்தான்.
சில நாள் கழித்து...
பேராசிரியர் கார்பெட் வணக்கம்! ரெயில் நிலையத்தில் இருந்து வீட்டுக்கு சைக்கிளில்தான் போவீர்களா?
ஆமா! அது சிறந்த தேகப் பயிற்சி ஆச்சே!

வழியில் அந்த பேராசிரியர், வீட்டுக்கு சாமான்கள் வாங்கிக்கொண்டார். அப்போது மீசை வைத்த ஒரு ஆசாமி அவர் சைக்கிள் பின்புறம் ஒரு சிறிய கருவியை ஒட்டினான். அது அவருக்குத் தெரியாது!


அவர் வீட்டுக்குப் போகையில், விசித்திரமான, பிரகாசமான பந்து போன்ற ஒரு நெருப்பு உருண்டை பறந்து வந்து அவரைத் தாக்கியது!

பத்திரிகைகள் பரபரப்பாக செய்தி வெளியிட்டன.
'எரி நட்சத்திரம்' மீண்டும் தாக்குதல்!
3-வது மர்மச் சாவு!
Scientist, Professor Alfred Corbet killed on road

மெக் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதிய கடிதம், கார்பெட் ஹிப்பிகளைத் தாக்கி கொடுத்த பேட்டி இவை அவர்கள் கொலைக்கு காரணமா இருக்க முடியுமா?
மெக் எழுதிய கடிதம் பத்திரிகையில் பிரசுரம் ஆகவில்லை. எனவே நாம் வேறு கோணத்திலும் ஆராய்ந்து பார்க்கணும்!
இருவர் மரணமும் பெரிய பாதுகாப்பு பிரச்சினையை ஏற்படுத்தி இருக்கு!
தலைவர் "எம்" முன் விவாதம் நீடித்தது.
கார்பெட் ராணுவ இலாகாவுக்காக வேலை செய்தார்.
ஆமா! புதிய சக்திமிகுந்த விமானத்தை தயாரிக்க!
அது பற்றிய அறிக்கையை அன்று சைக்கிளில் கொண்டு போய் இருக்கிறார்.
அதுக்காக நிறைய டிசைன்கள், விவரங்களை வீட்டில் வைத்திருந்தார்.
எரி நட்சத்திர தாக்குதலில் அது அழிந்துபோய் இருக்கலாம்.
அறிக்கை இருந்த பெட்டி சைக்கிளில் பத்திரமா இருக்கு ஆனா அறிக்கையை காணவில்லை!

அந்தப் பெட்டி தீயில் எப்படி கருகாமல் போய்விட்டது?
அந்த பிரீப்கேஸ் அவரே தயாரித்தது.
நெருப்பால் பாதிக்கப்படாத உலோகத்தால் அதை அவர் பிரத்யேகமாக செய்து இருக்கார்.
இப்போ அறிக்கை என்ன ஆச்சு என்பதே பிரச்சினை!
கார்பெட்டின் பிரீப்கேஸ் பெட்டியை போலீசார் பார்த்தபோது ரகசிய அறிக்கை இல்லை என எம் கூறினர்.
எனவே இதில் நாம் துப்பு துலக்க வேண்டும். இல்லையா?
3 கொலைகள்! அவற்றில் 2 நமது துறை கவனிக்க வேண்டியது!
அதே நேரம் ஒரு ஓட்டலில், ஒரு மீசை ஆசாமி—
நீங்கள் தானே மிஸ்டர் விக்டரின் கார் டிரைவர்?










"ரெக்ஸ் இண்டஸ்ரீஸ்" என்ற பெயரில் பெரிய தொழிற்சாலையை மிஸ்டர் விக்டர் நடத்தி வந்தார். அவரது கார் டிரைவரிடம்தான் மர்ம மீசை மனிதன் கைக்கெடிகாரத்தை கொடுத்தது. அதன்பிறகு விக்டரின் ஆபீசுக்கு ஒரு போன் வந்தது. போனை அவரது காரியதரிசி எடுத்து, மிஸ்டர் விக்டருக்கு இணைப்பு கொடுத்துவிட்டு சொன்னாள்:—

ரெக்ஸ் தொழிலகம்
ஆஸ்ட்ரோ பற்றி, ஒரு பத்திரிகை நிருபர் போனிலேயே பேட்டி எடுக்க விரும்புகிறார்.
நிருபர் போல் நடித்தது அந்த மீசை ஆசாமிதான்!
உங்கள் மாதிரி பிரமுகர்களிடம் பேட்டி எடுக்கிறோம். ஹிப்பி தலைவன் கருத்துகள் பற்றி உங்களுக்கு தைரியம் இருந்தால் நீங்க அபிப்பிராயம் சொல்லலாம்!
அவனது எரி நட்சத்திர பூச்சாண்டி என்னிடம் பலிக்காது!
அவன் ஒரு போலி வேடதாரி! இப்படி நான் சொன்னதாக பத்திரிகையில் போடலாம்!
பிறகு அந்த மர்ம மீசை ஆசாமி, இங்கிலாந்தின் பி. பி. சி. நிலையத்துக்கு போன் செய்து, "ஹிப்பி தலைவர் ஆஸ்ட்ரோவுக்கு தொழில் அதிபர் விக்டர் கண்டனம். ஆஸ்ட்ரோவை அவர் போலி வேடதாரி! குதர்க்கவாதி என்று கூறினார்!" என தகவல் கொடுத்தான்.
ரேடியோ நிலையத்தார் தயங்க, அவன் கூறினான்—
சார்! உங்களுக்கு சந்தேகமா இருந்தால், மிஸ்டர் விக்டரிடமே கேளுங்க!
2 நாள் கழித்து பத்திரிகைகளில்—
இன்னொரு எரி நட்சத்திர தாக்குதல்!
மர்ம பழிவாங்கும் படலம் நீடிக்கிறது!
தொழில் அதிபர் விக்டர், அவர் கார் டிரைவர் கொலை! ஹிப்பி தலைவரை பி. பி. சி. ரேடியோவில் கண்டித்ததன் விளைவு!

கர்னல் ...ட், அமெரிக்க ம...ணி மெக், விமான விஞ்ஞானி கார்பெட், ரெக்ஸ் தொழிற்சாலை அதிபர் விக்டர் என்று வரிசையாக பெரும் புள்ளிகள் மர்மமாக நெருப்புக் கோளத்தால் கொலை செய்யப் பட்டதால் இங்கிலாந்து அரசாங்கம் பரபரத்தது. விளைவு ஹிப்பி—ரிஷி ஆஸ்ட் ரோவை துப்பறியும் ரகசிய போலீசார் அழைத்துச் சென்றனர்.
ஸ்காட்லண்ட் யார்டு நிலையத்தில் விசாரணை நடந்தபோது—
சார்! மிஸ்டர் விக்டரின் கார் டிரைவரின் மனைவி வந்திருக்காள்
விக்டர் கார் டிரைவர் மனைவி விசாரிக்கப்பட்டாள்.
காரில் விக்டருடன் போகும்போது உன் கணவர் வெடி தாக்கி கொல்லப்பட்டார். அவரது கருகிய கையில் இந்தக் கெடிகாரம் இருந்தது.
என் கணவர் ஒருநாளும் கெடிகாரம் அணிவது இல்லை. இந்த கெடிகாரம் பற்றி எனக்கு தெரியாது.
கார் டிரைவர் கெடிகாரம் அணிவதில்லை என்று அவர் மனைவி கூறியது விசாரணையில் பெரிய திருப்பத்தை உண்டாக்கியது. போலீசார் அந்த கெடிகாரத்தை பலவித சோதனைகளுக்கு உட்படுத்தினார்கள். அப்போது அது வெறும் கெடிகாரம் மட்டும் அல்ல. கருமருந்து, மின்சாரம், ஒளி போன்றவற்றை ஈர்க்கக்கூடிய கருவியுடன் கூடியது என்பது தெரியவந்தது! அதுபற்றி உளவுத் துறைக்கு தகவல் வந்தது.
ஜேம்ஸ்! ஸ்காட்லண்ட் யார்டு பேசினுங்க!
எரி நட்சத்திர மர்ம தாக்குதல் பற்றி விக்டர் கொலை மூலம் ஒரு துப்பு கிடைத்து உள்ளது.

விக்டர் யாருடன் தொடர்பு கொண்டு இருந்தார்?
விக்டருக்கும், பேராசிரியர் கார்பெட்டுக்கும் தொடர்பு இருந்திருக்கு!
ஒரு நவீன போர் விமானத்தை இந்தியாவுக்காக விக்டரின் தொழிற்சாலை தயாரித்தது!
அதிகாரி வில்லியமும் ஜேம்சும் தொடர்ந்து விவாதித்தனர்.
பேராசிரியர் கார்பெட். டிசைனை யாராவது உளவாளிகள் திருடி இருக்க வேண்டும். அதற்காக அவர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம். அந்த டிசைன் அவ்வளவு முக்கியமானது.
அதே உளவாளி, அந்த டிசைன் அடிப்படையில் ரெக்ஸ் தொழிற்சாலை விமானம் தயாரிப்பதை தடுக்க மிஸ்டர் விக்டரை கொன்று இருக்கலாம்!
ரெக்ஸ் தொழிற்சாலை பங்குகள் விலை சரிவு! விக்டர் மரணம் எதிரொலி!!
விக்டர் மரணம் காரணமாக அந்த நவீன ரக விமானங்களை தயாரிக்கும் ஆர்டர் ரெக்ஸ் கம்பெனிக்கு கிடைக்கவில்லை!

தலைவர் "எம்"முடன்—
மிஸ்டர் விக்டர் தலைசிறந்த நிர்வாகி. தனிநபராக இருந்துகொண்டு ரெக்ஸ் தொழிற்சாலையை திறம்பட நிர்வகித்தார்.
அவரது திடீர் மரணம், அந்த தொழிற் சாலைக்கு விமான ஆர்டரை கிடைக்காமல் செய்துவிட்டது.
"பிரிடையர்" என்ற போட்டி தொழிற்சாலைக்கு அந்த ஆர்டர் இனி போக ஏற்பாடு நடக்குது!
அதன் காரணமாக அந்தக் கம்பெனியின் பங்கு விலை ஏறுகிறது...
ஸ்காட்லண்ட் யார்டை விசாரிக்கச் சொல்கிறேன்.
அந்த பங்குகள் திடீர் விலை ஏற்றத்தால் யாராவது லாபம் சம்பாதித்து இருக்காங்களா?
பிறகு வில்லியமும் ஜேம்சும்—
ஜேம்ஸ்! பங்கு மார்க்கெட்டில் சந்தேகப் படும்படி பங்குகள் விற்பனை நடந்திருக்கு!

பங்குகள் திடீர் விலை உயர்வால் 5 லட்சம் பவுண்ட் வரை லாபம் கிடைத்திருக்க வேண்டும்!
யாருக்கு அந்த லாபம்?
பினாமி பெயரில் பங்கு பரிவர்த்தனை நடந்திருக்கு!
ஆனால் ரோகோ என்பவர் 10 ஆயிரம் பவுண்டை போட்டு, 35 ஆயிரம் பவுண்ட் லாபம் சம்பாதித்து இருக்கார்.
துப்பு துலக்கும் வேலை தொடர்ந்தது.
யார் இந்த ரோகோ?
அவர், விக்டர் கொல்லப்படும் முன் ரெக்ஸ் பங்குகளை நிறைய விற்று இருக்கிறார்.
அதே நேரம்—
ரோகோ! உன் குரலை கேட்டு எத்தனை வருஷம் ஆச்சு!
ஆலன்! உன்னையும் ஜூடியையும் பார்க்க ஆசையா இருக்கு!
ஆலன்! ரோகோ இங்கிலாந்து திரும்பி விட்டாரா?
ஆமா ஜூடி! எனக்கு உடம்பு எல்லாம் நடுங்குது!


துறை அலுவலகத்தில் அதிகாரி வில்லியமும், ஜேம்சும்
நடத்தினர்.
ரெக்ஸ் தொழிற்சாலை பங்குகளை விற்கவும், பிரிடையர் கம்பெனி பங்குகளை வேகமாக வாங்கவும் காரணம் என்ன? விக்டர் இறந்துவிடுவார் என்று முன்கூட்டியே ரோகோவுக்கு தெரியுமா?
ரோகோ பற்றி ஸ்காட்லண்ட் யார்டு அறிக்கை அனுப்பி இருக்காங்க. ரோகோ இங்கிலாந்து பிரஜைதான். வயது 33. அமெரிக்கா போய் பல ஆண்டு அங்கு இருந்தார். பிறகு பிரான்ஸ் வழியா 2 மாதத்துக்கு முன் இங்கிலாந்து திரும்பி இருக்கார்.
35 ஆயிரம் பவுண்ட் சம்பாதித்து இருக்கார்.
இப்போ லண்டனில் கிரேஸ் இன் ரோட்டில் எலக்ட்ரானிக் சாமான்கள் இறக்குமதி செய்யும் சிறிய நிறுவனம் வைத்து உள்ளார்.
இன்று இரவு அங்கு போய் பார்க்கிறேன்.
அன்று இரவு.
உம்! இதுதான் ரோகோ கடை விலாசம். வெற்றிகரமான பங்கு மார்க்கெட் வியாபாரி கடை போல் தோன்றவில்லையே!

மூன்றுவது மாடியில் அந்த கடை இருந்தது. ஆள் நடமாட்டம் இல்லே. ஜேம்ஸ் அங்கே போய்—
QUANTRILL ELECTRONIC IMPORTS
மோசமான பூட்டால் பூட்டி இருக்காங்க!
பூட்டை உடைத்து ஜேம்ஸ் உள்ளே நுழைந்ததும் ஒரு உருவம் அவரைத் தாக்கியது.
அசையாதே! இல்லே சுடுவேன்!
நான் இங்கு இருந்து வேகமாக போக எண்ணினேன். அதனுல்தான் உங்களேத் தாக்கினேன்.

நீ யார்? இரும்பு பெட்டி திருடனா?
சரி அப்படியே இருக்கட்டும். நீங்க சட்டப்படி காரியம் செய்ய வந்ததா தெரிய வில்லையே!
அதை பற்றி கவலைப் படாதே! நீ எதற்கு வந்தாயோ அதைச் செய்
ஜேம்ஸ் தன் வேலையை பார்த்தார்.
இந்த பழைய கால இரும்புப் பெட்டியை திறக்க எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை!
என்ன! பெட்டி காலியா இருக்கு! ஒரு தங்க பேனா மட்டும் இருக்கு!
அதைக் கொடு!
ரோகோ சொன்ன மாதிரி இல்லையே! பெட்டி காலியா இருக்கே?
To Alan -- For Auld Lang Syne
ரோகோ என்ன சொன்னார்?

ஒரு பை நிறைய பணம் வைத்து இருப்பதாக ரோகோ பெருமை அடித்தார்.
அதனல் நான் அவரை பின்தொடர்ந்து வந்தேன்.
அவர் பேசியது என் காதில் விழுந்தது.
ரொம்ப லாபகரமான முதலீடு. ரொம்ப மலிவும்கூட!
ரெண்டு வேலை செய்தேன்! ரெண்டும் சேர்ந்து கம்பெனி லாபத்தை பல லட்சத்துக்கு உயர்த்தி விட்டன!
மறுநாள் காலே. முந்திய இரவு நடந்ததை 007 விவரித்தார்.
ரோகோவின் இறக்குமதி வியாபாரம் வெறும் வெளிப்போர்வைதான். பங்குகளில் அவர் முதலீடு செய்த பணம் அந்த கம்பெனி மூலம் வரவில்லே.
அப்படி யானல் அந்த இரும்புப் பெட்டி திருடன் சொன்ன மாதிரி ஏதோ இரண்டு வேலேகளைச் செய்ததுக்கு பெரிய சன்மானம் கிடைச்சிருக்கு!

அந்த ரெண்டு வேலை, பேராசிரியர் கார்பெட்டையும், தொழில் அதிபர் விக்டரையும் கொலை செய்ததுதானா?
அப்படி இருக்கலாம். ஆனா ஆதாரம்?
அது போக, அமெரிக்க உளவாளி மெக் கொலைக்கும் இந்த ரோகோவுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?
லண்டனில் உள்ள அமெரிக்க உளவு ஆபீஸ் போய், அதிகாரி பெர்லியை 007 சந்தித்தார்.
ஹலோ ஜேம்ஸ்! மெக் கார்த் கொலை பற்றி பேசணுமா? உட்காருங்க. என்ன தகவல் வேணும்?
ரோகோ என்பவர் பற்றி விவரம் அறிய முடியுமா?
அமெரிக்க குடியேற்ற பதிவு ஆபீசில் கேட்கலாம்.
உடனே டெலக்ஸ் மூலம் கேட்கிறேன். பதில் வரும்முன் நாம் வெளியே போய் பானம் அருந்தி வருவோம்!
இருவரும் திரும்பி வரும்முன் கம்பியூட்டர் மூலம் வைக்கப்பட்டு இருந்த தகவல் அமெரிக்காவில் இருந்து வந்தது.
ஜேம்ஸ்! ரோகோ பற்றிய முழு விவரமும் வந்து இருக்கு!

ஒரு விமான கம்பெனி அவரை டிசைன் என்ஜினீயர் ஆக வேலைக்கு சேர்த்து இருக்கு!
1975-ல் பாரீசில் நடந்த கண்காட்சிக்கு அவரை அனுப்பி இருக்காங்க.
அங்கேதான் அவருக்கு கஷ்ட காலம் தொடங்கி இருக்கு!
கண்காட்சியில் என்ன சங்கடம் அவருக்கு?
அங்கே பாகிஸ்தானுக்கு ரகசிய தகவல்களை விற்றதா பிடிபட்டு இருக்கார்!
அது அமெரிக்க விமான கம்பெனிக்கு பிடிக்கவில்லை. இல்லையா?
ஆமா! வேலையை விட்டு நீக்கினாங்க. வேறு விமான கம்பெனி எதிலும் வேலை பார்க்க முடியாமலும் செய்து விட்டாங்க!
உளவுத்துறை ஆபீசில் ஜேம்ஸ்—
அதன்பின் 6 ஆண்டு காலம் பாரீசில் அப்படியும் இப்படியுமா சுற்றிவிட்டு இங்கிலாந்து வந்து இருக்கார்.
இந்த தகவல்படி ரோகோ நலல ஆள் அல்ல என்பது தெளிவு ஆகிறது!

அதே நேரத்தில் லண்டன் அருகே உள்ள டேவான் என்ற இடத்தில் உள்ள ஒரு பங்களாவுக்கு ரோகா வந்தார். அங்கே அவர் அண்ணன் ஆலனும் அவர் மனைவி ஜூடியும் இருந்தனர்.
அண்ணா! நீங்க நலமா? தகவல் கொடுக்காமல் வந்து விட்டேன்!
ரோகோ! உன்னை சந்திப்பதில் மகிழ்ச்சி! நீ வசதியா இருப்பதா தெரியுது!
இந்த ஜூடியை நீங்க மறக்க வில்லையே?
ஜூடியை மறந்து இருந்தால் இப்படி வந்து இருப்பேனா?
ஜேம்ஸ் பாரீஸ் போய், அங்கு உளவுத்துறையில் ரோகோ பற்றி விசாரித்தார்.
ரோகோ பற்றி குற்ற ரிக்கார்ட் எதுவும் கிடையாது!
அவர் இங்கே விமான வடிவமைப் பவராக வேலை செய்து இருக்கார்!
விமான டிசைனர் ஆகவா?
ஒரு விமான கம்பெனியும் அவரை வேலைக்கு சேர்த்துக்கொள்ள வில்லை என்று கேள்விப் பட்டேனே!
அவர் வேலை, நீங்க நினைக்கிற மாதிரியான விமானத்துக்கு டிசைனர் இல்லை!

பாரீஸ் உளவுத்துறை அதிகாரிக்கும் 007-க்கும் பேச்சு தொடர்ந்தது.
நீங்க சொல்றது விளங்கவில்லையே சார்! ரோகோ விமான டிசைனரா வேலை பார்த்தார் இல்லையா?
விமானங்களை தயாரிக்கும் தொழிற் சாலைகளில் அவருக்கு வேலை கிடைக்கவில்லை.
ஆமா! வேலை பார்த்தார்!
ஆனா பொம்மை விமானங்களை தயாரிப்பவர்கள் வேலை கொடுத்தாங்க! குறிப்பா ரேடியோ கட்டுப்பாடு மூலம் பறக்கும் விளையாட்டு விமானம் தயாரிப்பவர்கள் வேலை கொடுத்தனர்!
ஓகோ! அப்படியானால் ரோகோ, பிரான்சில் ரேடியோ கட்டுப்பாடு பொம்மை விமான தயாரிப்பு டிசைனர் ஆக வேலை பார்த்தார்!
அவருக்கு வேலை கொடுத்தது யார் தெரியுமா?
அவர் பெயர் டுதோர்ட். அவரது கம்பெனி பல கள்ளத்தனமான ... இருப்பதாக சந்தேகம் இருக்கு!

டுதார்ட் என்பவரின் கம்பெனி இங்கேதானே இருக்கு? இவருக்கும் எரி நட்சத்திர கொலைக்கும் என்ன தொடர்பு?
DUTARD CIE AVIONS JOUETS TÉLÉGUIDÉS
டுதார்டின் கம்பெனிக்கு 007 வந்தார்.
நீங்க என்ன விஷயமா டுதார்ட்டை பார்க்கணும்?
ஒரு வெள்ளைக்காரரர் பற்றி தெரிந்து கொள்ள!
அவர் பெயர் ரோகோ. எனது பழைய நண்பர்!
அப்போது—
இவன் பெயர் ரோச்சி பழைய லண்டன் கேடி அல்லவா?
டுதார்ட் பார்க்க சம்மதித்ததும், 007 உள்ளே சென்றார்.
மார்க் ஹசார்ட்!
ரோகோ இங்கே திறமையான வேலை பார்த்தார். உங்க பெயர்?

ரோகோ இங்கிருந்து விலகிப் போன பிறகு, தகவலே இல்லே!
சில மாதங்களுக்கு முன் விலகினார். இங்கிலாந்து போவதாக கூறினார்!
டூதார்டிடம் பேசிவிட்டு ஜேம்ஸ் வெளியே வரும்போது—
மிஸ்டர்! ஒரு நிமிஷம்!
நான் ரோகோவுக்கு ரொம்ப பழக்கமானவள்!
நீங்க ரோகோவைப் பார்க்க விரும்பினா இந்த விலாசத்துக்கு இன்று இரவு 9 மணிக்கு போங்க!
ரோச்சி பேசறேன்!
ரோகாவை தேடி இங்கே வரும் அந்த வெள்ளையனை நீங்க சொல்ற மாதிரி செய்றேன் மிஸ்டர் ரோச்சி!

டுதார்ட் கம்பெனியில் போனில் பேசிய ரோச்சி என்ற அந்த ஆசாமி, அன்றிரவு ஒரு வீட்டின் பின்புறமாக நுழைந்தார்.
ஜேம்ஸ்பாண்ட் வந்ததா தெரியுதா?
இன்னும் வரவில்லை!
அந்த ஜேம்ஸ் நம்மை மடையன்கள் என்று நெனைச்சுக்கிட்டு இருக்கான்! அவன் வரட்டும்!
டுதார்ட் பெண் செயலாளர் கொடுத்த விலாசத்தில் உள்ள கட்டிடத்தை, ஜேம்ஸ் ஒரு ஓட்டலில் இருந்து நோட்டம் போட்டார்!
உம்! மணி 9 ஆகிவிட்டதே! அங்கே போகிறேன்!


பெண்
செயலாளர் சொன்னது
உண்மையா? அந்த
ரோச்சி இங்கே
வருவானா?

ஆனால் ரோச்சி அந்த கட்டிடத்தின்
பின்புறம் வழியா உள்ளே போய்
விட்டது 007க்கு
தெரியாது!
துப்பாக்கிகளில்
"சைலன்சர்" களை பொருத்தி
ஆச்சு! ஜேம்ஸ் வந்ததும்
சுட வேண்டியதுதான்!


பக்கத்து கட்டிடத்துக்கு ஜேம்ஸ்
சென்றார். அது பல வீடுகளைக்
கொண்ட அடுக்கு மாடி கட்டிடம்.
வழியில் நின்ற பெண்ணிடம் தன்
மேல் சந்தேகம் வராதபடி
பேசினார்.
கடைசி
மாடியில் ஒரு
இளம்பெண்ணா?
அந்த விதவையா
அல்லது! அந்த
டீச்சரா?


அந்த டீச்சர் அம்மா தான்!
நன்றி! அவள் வீடு 34-ம் நம்பர்!
ஜேம்ஸ் மேல்தளம் வந்தார்!
இருட்டாக இருந்தது. ஜேம்ஸ் மெள்ள நடந்து அந்த விலாசத்தில் உள்ள கட்டிடத்தின் மேல் வந்தார்.
3-வது மாடிதானே! இதற்கு நேர் கீழே!

ரோச்சி! ஜேம்ஸ் பாண்ட் நிச்சயமா இங்கே வருவானு?
அந்த முட்டாள் நிச்சயம் வருவான்!
நாம் அவனுக்கு வைத்த பொறியை உண்மை என்று நம்பிவிட்டான்!
ரோச்சி! அந்த முட்டாள் இதோ வந்து விட்டான்!
புத்திசாலிகளே! கையை மேலே தூக்குங்க!
வெரிகுட்! இனி உங்க புத்திசாலி முகத்தை சுவற்றுக்கு நேரே திருப்புங்க!

ரோச்சி! நீ என் மச்சி! நாம ரெண்டு பேரும் இனி ரோகோ பற்றி கொஞ்சம் மனம்விட்டு பேசணும்!
அங்கு இருந்த துப்பாக்கிகளையும் 007 எடுத்துக்கொண்டார்.
இனி ரோச்சி! நீ மட்டும் இங்கு வாம்மா!
உட்கார்!
இது உன் துப்பாக்கி! அதையே உன் தலைக்கு குறி வைக்கிறேன்!

ரோகோவை இங்கிலாந்துக்கு அனுப்பும்படி ஒரு நாட்டின் உளவுத்துறை, டுதார்டுக்கு உத்தரவிட்டது. 2 வேலைகளைச் செய்ய ரோகோ அனுப்பப்பட்டார்
என்ன 2 வேலை?
அந்த வேலை என்ன என்று சொல். இல்லை உன் தலையை சல்லடைக் கண்களாக ஆக்கிவிடுவேன்
சத்தியமா எனக்கு தெரியவே தெரியாது ஜேம்ஸ்!
டுதார்டுக்கு உத்தரவு போட்ட நாடு எது என்றும் எனக்குத் தெரியாது! ஆனா அது ஒரு பணக்கார நாடா இருக்க வேண்டும்!
அந்த 2 வேலைகளைச் செய்ய ரோகோவுக்கு முதலில் 10 ஆயிரம் டாலர் கொடுக்கப்பட்டது. மீதி 40 ஆயிரம் டாலர் ஒரு பொருளை கொடுத்ததும் தரப்படும் என்று பேசப்பட்டது.

ஆனல் ரோகோ இப்போ ஒப்பந்தத்தை மீறுகிறார். மீதி 40 ஆயிரம் டாலரையும் இப்பவே கொடுக்க வேண்டும் என்கிறார்.
அது மட்டும் அல்ல! அந்தப் பொருளைக் கொடுத்ததும் மேலும் 50 ஆயிரம் டாலர் வேணும் என்றும் கேட்கிறார்!
ஜேம்ஸ் பேச்சில் ஈடுபட்டதை பயன்படுத்தி, சுவர் அருகே நின்ற ஒரு அடியாள் துப்பாக்கியை எடுத்தான். உடனே ஜேம்ஸ் அவனை எச்சரிக்க சுட்டார்!

அவன் துப்பாக்கியை கீழே போட்டான். ஆனால் ரோச்சி—
மேஜையை தள்ளி விட்டுவிட்டு, சிகரெட் லைட்டர் போன்ற ஒன்றை எடுத்தான்!
அதில் இருந்து மயக்கத்தை கொடுக்கும் ஒருவித வாயு வெளிப்பட்டது. உடனே ஜேம்ஸ் அவனை சுட்டார்.
கீழே போட்ட துப்பாக்கியை எடுத்த அந்த அடியாள் அடுத்த பலி ஆனான்.
ஏய்! மூணாவது மடையா! உன் இடது கை சரி இல்லை. அதை நல்லா சுவர் மீது வை!

யார் மடையன்? நீ பாரீசைவிட்டு உயிரோடு திரும்ப மாட்டாய்!
அடி சக்கை! அண்ணாத்தே! உன்னைப் பார்க்க பரிதாபமா இருக்கு!
என்னையே மிரட்டுகிறாயா? இதோ உனக்கு!
அவன் மயங்கி விழ, ஜேம்ஸ் புறப்பட்டார்!
ஜேம்ஸ் அந்தக் கட்டிட மொட்டை மாடி வழியாக சென்று, எந்த குடி இருப்பு கட்டிடம் வழியாக போனாரோ, அதன் வழியே திரும்பினார்.
அந்த டீச்சரைப் பார்த்திங்களா?
ஆமா மேடம்! உங்க உதவிக்கு நன்றி. வருகிறேன்!

இதற்கு இடையில் ரோகோ, தன் அண்ணன் வீட்டுக்குப் போய், அண்ணன் மனைவி ஜூடியை சந்தித்தார்.
ரோகோ! நீங்க லண்டன் திரும்பாம பாரீசிலேயே இருந்து இருக்கலாம்!
ஜூடி ரோகோவின் காதலியாக இருந்தவள். அவளைத்தான் ஆலன் திருமணம் செய்து இருந்தார்.
ஒரு வார்த்தைகூட சொல்லாமல் இங்கிலாந்தை விட்டு போய்விட்டீங்க. பல ஆண்டு காத்து இருந்தேன். தகவலே இல்லை. பிறகு உங்க அண்ணனைத் திருமணம் செய்து கொண்டேன்.
உன்னை நான் குறை சொல்லவில்லை. ஏதோ நடந்து விட்டது!
அண்ணனைப் பற்றி கவலைப்படாதே. நான்தான் திரும்பி விட்டேனே!
என் மீது உனக்கு இன்னும் அன்பு குறையவில்லை! உன் கண்கள் அதை காட்டுகிறது.

அவர்கள் இருவரும் பேசியதை ஆலன் கேட்டுக்கொண்டார்!
வேண்டாம் ரோகோ! சரியோ, தவறோ நான் உங்க அண்ணனை மணந்து கொண்டேன்!
இப்போ நான் அவர் மனைவி!
அவன் கிடக்கிறான்! நீ இன்னும் என் காதலிதான்!
பாரீசில் இருந்து ஜேம்ஸ்பாண்ட் லண்டன் திரும்பினார். விமான நிலையத்தில் அமெரிக்க உளவாளி பெர்லி பார்த்தார்.
என்ன ஜேம்ஸ்! பாரீசில் ரோகோ பற்றி துப்பு கிடைச்சுதா?
மெக் கார்த் கொலை பெரிய பிரச்சினை ஆகிவிட்டது!
சில தடயங்கள் கிடைத்தன!
அமெரிக்காவில் இருந்து என்னை கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைக்கிறார்கள்!
கொலை செய்தவனை எப்படியாவது பிடித்து விடலாம்!
மெக் கூறிய ஒன்று இப்போ என் நினைவுக்கு வருது!

அதாவது, மெக் ஒருநாள் ஒரு மீசை ஆசாமியை ஓட்டலில் பார்த்து இருக்கார். அது யார் என்று மெக்கால் அப்போது சொல்ல முடியவில்லை.
பாரீசில் விமான ரகசியத்தை ரோகோ விற்றதை கண்டுபிடித்தது மெக்தான்!
உண்மையா? ரோகோவின் வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்தது மெக்தானா?
ஆமா! அப்போ மெக் பாரீசில் இருந்தார்!
பழிக்குப் பழிவாங்கவே ரோகோ “மெக்”கை கொலை செய்து இருக்கணும்!
சரி! அதை நிரூபிக்க ஆதாரம் தேவை.

இங்கே எரி நட்சத்திர கொலைகள் பெரிய பிரச்சினை ஆகிவிட்டது! அதை எப்படியும் கண்டு பிடிப்பேன். அவசரமா போகணும். வர்றேன்!
ஜேம்ஸ் உளவுத் துறை அலுவலகம் வந்ததும் வில்லியம் வந்து—
ஜேம்ஸ்! நீ பாரீஸ் போன பிறகு ரோகோ பற்றி பல தகவல் கிடைச்சிருக்கு!
சொந்த ஊர் டேவான். பூர்வீக எஸ்டேட் சொத்து அவர் அண்ணன் ஆலன் பெயரில் இருக்கு! ரோகோ எப்போதும் கோபக்காரன். வன்முறையாளன்!
படிக்கும்போது, பரீட்சையில் காப்பி அடித்ததை ஒரு விஞ்ஞான பேராசிரியர் கண்டுபிடித்தார். அதனல் ரோகோ கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டு இருக்கார்!
அந்த பேராசிரியர்தான் கொலை ஆன கார்பெட்!

எரி நட்சத்திர கொலைக்கும், ரோகோவுக்கும் தொடர்பு இருப்பதாக முதல் முதலாக உளவுத்துறையில் சந்தேகம் முளைத்தது.
ரோகோ, தன்னை கல்லூரியில் இருந்து நீக்க காரணமாக இருந்த பேராசிரியரை பழிக்கு பழிவாங்க அவரை கொலை செய்து இருக்க வேண்டும்!
மேலே படி!
அமெரிக்காவில் ஏரோபாயில் என்ற விமான தொழிற்சாலையில் ரோகோ முதல் முதலில் வேலைக்கு சேர்ந்து இருக்கிறார். கம்பெனி தொழில் ரகசியத்தை விற்றதால் விக்டர் என்ற அதிகாரியால் வேலை நீக்கம் செய்யப் பட்டார்.
ஆக, விக்டரைக் கொல்லவும் ரோகோவுக்கு காரணம்
அந்த அதிகாரி விக்டர்தான் படிப்படியாக உயர்ந்து இங்கே ரெக்ஸ் தொழிற்சாலை அதிபராக பிரசித்திபெற்று கடைசியில் எரி நட்சத்திர கொலைக்கு ஆளானவர்!

பாரீசில் டூதார்ட் என்பவரின் அமைப்பு 2 வேலைகளைச் செய்ய ரோகோவை இங்கு அனுப்பி இருக்கு!
கார்பெட், விக்டர் இருவரையும் கொலை செய்யவா?
இல்லை! பேராசிரியர் கார்பெட்டின் நவீன போர் விமான வடிவமைப்பு அறிக்கையை கைப்பற்றுவது ஒன்று. விக்டர் தொழிற்சாலை விமான தயாரிப்பை தடுப்பது இரண்டாவது.
ரெக்ஸ் தொழிற்சாலை, கார்பெட்டின் தொழில் நுட்ப அறிக்கைபடி இந்தியாவுக்கு போர் விமானங்களை தயாரிக்க இருந்தது. வேறு ஒரு நாடு அதைத் தடுத்து அந்த அறிக்கையை திருடி அதன்படி விமானம் தயாரித்து இந்தியாவுக்கு விற்க முயன்றது. அதற்காக டூதார்ட் என்பவரை அந்த நாட்டின் உளவு ஸ்தாபனம் பயன் படுத்தியது!
உளவுத்துறை தலைவர் "எம்" முன்—
ஆக, டூதார்ட்டிடம் பணம் வாங்கிக் கொண்டு கார்பெட், விக்டர் இருவரையும் ரோகோ கொன்று இருக்கார். மற்ற எரி நட்சத்திர கொலைகள் ஏன் நடந்தன?
ரோகோ விமான ரகசிய அறிக்கையை திருடினாலும் அதை டூதார்ட் கம்பெனியிடம் கொடுக்க வில்லை! அதிக பணம் கேட்டார்! மெக் பழைய எதிரி. எனவே அவர் கொலை செய்யப்பட்டார் கர்னல் ராபர்ட் கொல்லப்பட்டது இந்தக் கொலைகளை, ஹிப்பி தலைவரின், "கிரகங்கள் பழிவாங்கும் தத்துவ"த் துடன் இணைத்து திசை திருப்ப!

ரோகோ வசித்த பல மாடி கட்டிடத்தின் அடியில் ஒரு மர்ம துப்பாக்கி காத்து இருந்தது.
ரோகோ கார் எது? இங்கே அவன் எப்போ வருவான்?
ரோகோ லிப்ட் வழியாக இறங்கியபோது—
டேவான் போய்விட்டு திரும்பிவிட்டீர் களா?
ஆமா! என் அண்ணன், அவர் மனைவி இருவரையும்நீண்ட காலத்துக்குப் பின் சந்தித்தேன்!
ரோகோ கார்கள் நிறுத்தப்பட்டு இருந்த இடம் வந்தார்.
ஏய் ரோகோ! நில்!

துப்பாக்கியை கண்டு அதிர்ந்த ரோகோ—
அமெரிக்க உளவாளி பெர்லி!
யார் நீ?
என் சக உளவாளி மெக்கை நீதான் கொன்றது!
ஏன் அவனைக் கொன்றாய் என்று மரியாதையா சொல்லு!
பாரீசில் எங்க இருவருக்கும் ஏற்பட்ட தகராறால் அவனைக் கொன்றேன் என சந்தேகமா? இல்லை!
நீ அமெரிக்க உளவாளியா இருக்கலாம். உன் ஜம்பம் இங்கே பலிக்காது!
ஓகோ அப்படியா! மரியாதையா காருக்குள் ஏறு!
சரி போவோம். ஆனா நீ அழியப் போகிறாய்!
நானும் உன்னுடன் காரில் வாரேன்!

பெர்லி கட்டளைப்படி ரோகோ காரில் ஏறினார். ஆனால், காரை "ஸ்டார்ட்" செய்வது போல், டேஸ் போர்டில் இருந்த துப்பாக்கியை எடுத்து—
துப்பாக்கி சுடும் சத்தம்!
அப்படி இருக்காது. ஒரு கார் கிளம்பி போகுது!
பெர்லி பிணத்தை ரோகோ தூக்கி டிக்கியில் போட்டார்.
பெர்லி! உன் சகா மெக் போன உலகுக்கே நீயும் போ!
ரோகோ காரை இன்னொரு கார் பின்தொடர்ந்தது. முன் கண்ணாடியில் தெரிந்தது!


உளவுத்துறை தலைவர் "எம்" முன்—
ஜேம்ஸ்! எல்லா கொலைகளுக்கும் காரணம் சொல்லிவிட்டாய்! எரி நட்சத்திர தாக்குதல் பற்றி சொல்லவில்லையே!
அந்த எரி நட்சத்திரம் என்பது ஹீலியம் வாயு நிரப்பிய பலூன்தான். அதன் மீது பிரகாசமான பிளார சென்ட் பெயிண்ட் தடவப்பட்டு இருந்தது. பலூனுக்குள் வெடி மருந்து வைக்கப்பட்டு இருந்தது.
அது குறிப்பிட்ட இலக்கை தாக்குவது எப்படி? மாஜிக்கா?
மாஜிக் அல்ல. ரோகோ பிரான்சில் ரேடியோ கட்டுப்பாடு பொம்மை விமானங்களை செய்து தேர்ச்சி பெற்று இருந்தான்.
அதாவது வெடி மருந்தும், ஹீலியம் வாயும் உள்ள பலூனை பறக்கும் பொம்மை விமானம் தூக்கி வந்து இருக்கு இல்லையா?

ஆமா! ஹீலியம் பலூன் எளிதாக பறக்கும். விமானத்துக்கு கறுப்பு நிறம் அடித்து அது கண்ணுக்கு தெரியாதபடி செய்து இருக்கிருர்! அதன் அமைப்பு இதோ!
அது குறிப்பிட்ட இலக்கை எப்படி தாக்குது?
தாக்க வேண்டிய இலக்கில், "பீப் பீப் கோமர்" கருவியை வைத்து விடுகிருர். அதன் ஒலி ஏற்புக்கு தக்க பலூனில் உள்ள ரேடியோ கருவி இயங்கி போய் தாக்குது!
தாக்கவேண்டிய இடத்தில் முன் கூட்டியே கோமர் கருவியை எப்படி வைக்கிருர்?
செயின் லாக்கெட், பேனு. போன்ற சிறிய உருவங்களில் கோமர் கருவியை செய்து தாக்கவேண்டிய இலக்கில் எளிதாக வைத்துவிடுகிருர்!
விக்டரின் கார் டிரைவரிடம் அந்தக் கருவியை கெடிகாரத்தில் இணைத்து கொடுத்து விட்டார்!
வில்லியம் சாருக்கு போன்


ரோகோவை
ஸ்காட்லண்ட் யார்டு
கார் பின்தொடர்ந்தது.
ஆனுல் அவனே கண்டு
பிடிக்க முடியவில்லையா?
சேச்சே!
காரை ஒரு இடத்துக்கு ஓட்டிப்
போன ரோகோ, அங்கே ஒரு
பெரிய லாரியில் ஏற்றினர்!
பிறகு பெர்லி
பிணத்தை
லாரிக்குள்
போட்டார்
கடைசியா ஒரு
சொந்த வேலே! பிறகு
நிம்மதியா இருப்பேன்!
ரோகோவை
பிடிப்பதில்
போலீசார்
தீவிரப்படுத்த
பட்டனர்.
எல்லா போலீஸ்
நிலேயமும் உஷார்
படுத்தப்பட்டு கார்கள்
சோதனே போடப்
படுகின்றன!
அதே நேரத்தில்
ரோகோ லாரியை
வேகமாக ஓட்டிச்
சென்முர்.
சில மணி
நேரமே! பிறகு
புது வாழ்வு!

அந்த லாரி ஒதுக்குப்புறமான காட்டுப் பகுதிக்கு போனது.
இது பொருத்தமான இடம்!
ஒரு இடத்தில் லாரியை நிறுத்திய ரோகோ, பெர்லி பிணத்தை தூக்கினார்.
பெர்லி! போய் வா!
ரோகோ சிக்கவில்லை. லண்டனுக்கு வெளியே போய் இருக்க முடியாது என போலீசார் கூறுகிறார்கள்!
ரோகோ இருப்பிடத்தை அறிய ஒரு ஆள் இருக்கிறார். அங்கே போகிறேன்!
ஜேம்ஸ்! நீ யாரைச் சொல்கிறாய்?
ரோகோவின் அண்ணன் ஆலன்! அதனால் டேவான் போகிறேன்!
போலீசார் ரோகோவின் காரையே கண்காணித்தனர். ரோகோ லாரியில் தப்பித்து போய் அவர் அண்ணன் வீடு அருகே நிறுத்தினார்.
எனது கடைசி வேலையை முடிக்கிறேன்!

பிறகு காரில் ஏறிக்கொண்டார்!
வெளியே போன ஆலன் வீடு திரும்பும்போது—
ஆலன்! ரோகோ வந்து இருக்கார்!
அண்ணே! என்னை மீண்டும் எதிர்பார்த்து இருக்க மாட்டாய்?
வா! இன்று என் திருமண நாள் விருந்து! நீயும் கலந்து கொள்!
ஜூடி வரச் சொல்லிதான் ரோகோ வந்து இருப்பான். ஜூடியும், ரோகோவும் காதலர்கள் என்று தெரிந்தும் நான் ஜூடியை மணந்து இருக்கக்கூடாது.

உம்...அவன் காதலியை நான் திருமணம் செய்தது தப்பு! அவளை என் தம்பிக்காக காத்திருக்கச் சொல்லி இருக் கணும்!
ஆலன்! உடல் நலம் இல்லையா?
ஒரே தலைவலி! கொஞ்சம் காற்றாட நடந்துவிட்டு வருகிறேன்!
அண்ணா! உன் திருமண நாளுக்கு ஒரு சின்னப் பரிசு. அதை வாங்கிக் கொண்டு போ!
ஆகா! அழகான தங்கப் பேனா!
முன்னமே தெரிந்து இருந்தா இதை விட பெரிய பரிசு கொண்டு வந்து இருப்பேன்!
ரோகோ! நான் கொஞ்சம் நடந்துவிட்டு, தலைவலி நின்றதும் திரும்பி வந்து, விருந்தில் கலந்து கொள்கிறேன்!
மிஸ்டர் ஆலன்!
வந்தது ஜேம்ஸ்!

ஆமாம்! நான் ஆலன்தான். ரோகோவின் அண்ணன்!
ரோகோ கார் இங்கு நிற்குதே!
ஆமா! அவன் இன்றைய விருந்துக்கு வந்து இருக்கான்!
மிஸ்டர் ஆலன்! உங்க பேனா கீழே விழுந்து விட்டதே!
அந்தப் பேனாவை பார்த்ததும் ஜேம்ஸ் மூளையில் பொறி தட்டியது!
ரோகோ இரும்பு பெட்டியில் இருந்த பேனா!
ஆலன்! உங்களுக்கு ரோகோ பரிசு கொடுத் தாரா?
To Alan—For Auld Lang
எஸ்! என் தம்பி எனக்கு இப்போதுதான் இதை கொடுத்தான்.
இதன் பின் ஒரு கதை இருக்கு! நீங்க திரும்பும் வரை இதை நான் வைத்து இருக்கேன்!

ரோகோ! நான் பயந்து விட்டேன்!
பயப்படாதே! ஆலன் இறந்ததும் உயில்படி இந்த எஸ்டேட் எனக்கு சொந்தமாகிவிடும்!
இனி நாம் என்றும் இணை பிரியாமல் இருக்கலாம்!
உன்னை நான் மணந்து கொள்வேன்.
நான் இங்கு இருப்பதை எல்லா விருந்தினரும் சாட்சி சொல் வார்கள்!
ரோகோ! என்ன சொல்கிறீர்கள்? எனக்கு புரியவில்லையே!
புரிய வேண்டாம்! இந்த ரேடியோ பட்டனை அழுத்து கிறேன்!
CLICK
அந்த ரேடியோ கருவியின் விசைக்கு தக்க, லாரியின் கதவுகள் தாங்க திறந்தன! பிறகு...

லாரியில் இருந்து, வெடி மருந்து உள்ள ஹீலியம் பலூன் ஒன்றை, ஒரு பொம்மை விமானம் கொண்டு சென்றது!
ஜூடி! ரோகோவை பார்க்க ஒருவர் வந்திருக்கார் அவர் பெயர் ஜேம்ஸ்பாண்ட்!
நான்தான் ரோகோ! உங்களுக்கு என்ன வேண்டும்?
ஒரு முக்கிய விஷயம் பேசணும். 5 நிமிடம் வெளியே வரமுடியுமா?
எங்க அண்ணனின் நண்பரா? வெரிகுட்! ஆமா, அது என்ன முக்கிய விஷயம்?
அது ஒரு பெரிய ரகசியம்!
அதனால் தான் இந்த தனி இடத்துக்கு உங்களை அழைத்து வந்தேன்!
இந்தாங்க தங்கப் பேனா! நீங்க உங்க அண்ணனுக்கு கொடுத்தது.

வெடி மருந்து பலூன் வந்து தாக்கக் கூடிய கருவி உள்ள அந்தப் பேனாவை ஜேம்ஸ் ரோகோவிடம் கொடுக்க முனைய—
எனக்கு வேண்டாம்! விருந்துக்கு நேரம் ஆகுது! நான் போறேன்!
வைத்துக் கொள்ளுங்க ரோகோ!
இதை நீங்க வைத்து இருந்து உங்க அண்ணனிடம் கொடுத்து விடுங்க!
அந்த நேரத்தில், அந்தப் பேனாவில் உள்ள கோமர் கருவியை நுகர்ந்து கொண்டு, எரி நட்சத்திர பலூன் வந்துகொண்டு இருந்தது!
பேனாவை நீங்களே வைத்துக் கொள்ளுங்க!
இல்லை ரோகோ! நீங்கதான் வைத்துக் கொள்ளணும்!
ஐயோ! பலூன் வருதே!

ஜேம்ஸ்! என்னை வற்புறுத்தாதே! அண்ணனிடம் பேனாவை நீயே கொடு!
ஜேம்ஸ் தொடர்ந்து வற்புறுத்த,
ரோகோ துப்பாக்கியை எடுத்து சுட்டார்!
தோளில் குண்டு பாய்ந்த ஜேம்ஸ் கீழே விழ, வெடி பலூன் தாக்கு தலில் இருந்து தப்ப ரோகோ ஓடினார்.
ஐயோ தப்பணுமே!
சுதாரித்த ஜேம்ஸ், அந்த பேனாவைத் தூக்கி ரோகோ மீது வீசினார்! அதனால்—







ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. Copyright: Express Newspapers Plc. and Glidrose Publications Limited. LONDON.

# ரத்தக் காட்டேறி!

ஜேம்ஸ்பாண்ட், கிளேட்டனின் மனைவியை, ரத்தக் காட்டேறிகளிடம் இருந்து காப்பாற்றும் கட்டம் என்னை மெய்சிலிர்க்கச் செய்தது!

—வி. ரவி, மொரப்பூர், கரூர் தாலுகா.

—சா. சதீஷ் குமார், ஜோதிபுரம்.

"ரத்தக் காட்டேறி!" சித்திரக் கதை ஆரம்பம் முதல் முடிவு வரை ஒரே விறு விறுப்பு, பர பரப்பு, மர்மம்!

—செல்வராஜ், கன்னிகைப்பேர்.

—கே. சுந்தர், சென்னை–20.

—அந்தோணி தாஸ், நத்தமாழப்பட்டி.

"ரத்தக் காட்டேறி", அற்புதமான ஆங்கில திரைப் படத்தை பார்த்த பிரமிப்பை ஏற்படுத்தியது!

—பு. சந்திரகுமார், அணைக்கரை.

—ஜி. முருகன், பண்ணப்பட்டி.

இதுவரை இப்படி ஒரு நவீன கதையை படித்தது இல்லை! நன்றி!

—வே. அகோரம், திருப்புன்கூர்.

—ஜி. கே. தவுலத், பரங்கிபேட்டை.

—எஸ். ராஜா ராமன், பொள்ளாச்சி–3.

—எம். ஏ. முகமது நகீர், அடியக்கமங்கலம்.

# எஸ்டேட் பேய்!

"ராம்ஜி" எழுதும் திகில் கதை "எஸ்டேட் பேய்" ஒரு வித்தியாசமான படைப்பு. பல மர்மங்களை உள் அடக்கி கதை "விர்" என்று விமான வேகத்தில் செல்கிறது!

—ஜீ. மாரியப்பன், டீப் டேல், நீலகிரி.

—எஸ். பார்த்தசாரதி, பண்ணப்பட்டி.

"எஸ்டேட் பேய்!" எடுத்த எடுப்பிலேயே விறுவிறுப்புடனும், திகிலுடனும் பறக்கத் தொடங்கிவிட்டது!

—வி. ரவிச்சந்திரன், மாதப்பூர்.

—தங்க. கதிரவன், ஒரத்தூர்.

பல புதிய திருப்பங்கள் வர இருப்பதை எஸ்டேட் பேய் ஆரம்ப அத்தியாயங்கள் சுட்டிக் காட்டுகின்றன!

—ஆர். ரமேஷ், பெருந்துறை.

புதிய மானேஜர் மனோஜிக்கு என்ன ஆகுமோ என்று குலை நடுக்கமாக உள்ளது!

—கே. வனஜா, கோவை–4.

—சி. மூர்த்தி, பாண்டிச்சேரி.

—ஆர். கே. குகன், தல்லாகுளம், மதுரை.

[illegible] சதுரத்தைப் போல் ஒரு [illegible] வரையுங்கள். பிறகு அதில் காட்டப் [illegible]படி துண்டுகளாக வெட்டவும். [illegible], அதற்கு கீழே கறுப்பு நிறத்தில் [illegible] போல் வீடு, படகு போன்ற [illegible] அவற்றை அமையுங்கள்.






## சந்தா விபரம்

(தபால் மூலம்)

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 36-00 |
| ஆறு மாதம் | ரூ. 19-00 |

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**வி. பி. பி. கிடையாது.**

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:—

நிர்வாகி,

**ராணி சிண்டிகேட்,**

1091, பெரியார் நெடுஞ்சாலை,

**சென்னை - 600 007.**

ராணி காமிக்ஸ்

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

# ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்..!

# ராணுவ ரகசியம்!

—முழு நீள சித்திரக் கதை!—

திகில் கதை மன்னன் **ராம்ஜி** எழுதும்

## எஸ்டேட் பேய்!

—துப்பறியும் மர்ம பேய்த் தொடர்கதை!—

ரூ.50 பரிசு: வாசகர் போட்டி!

படிக்கத் தவறாதீர்கள்!

ராணி காமிக்ஸ்

**15.7.85-ல் வெளிவருகிறது!**

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7.